# ஜனநாயகமும் அதன் மட்டுப்பாடுகளும்

பேராசிரியர் வே. குணரத்தினம்
கலை கலாசார பீடம்,

ஜனநாயகம் சமகாலத்தில் மக்களது இறையாண்மை மற்றும் தனிமனித சுதந்திரத்தின் உருவமாக அமைந்து நவீன ஆட்சி முறைகளின் உச்சமானதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு பின்பற்றப்படுகின்றது. சமத்துவம், மக்கள் பங்கேற்பு, பிரதிநிதித்துவம் முதலான அடிப்படைக் கொள்கைகளில் தன்னுடைய மூலத்தைக் கொண்டுள்ள இந்த ஆட்சி முறை உலகில் பெரும்பாலான நாடுகளில் பின்பற்றப்படுகின்றது. இவ்வாட்சிமுறையினை பின்பற்றுகின்ற மேற்கத்தேய நாடுகள் அதனை பின்பற்றாத நாடுகளை விமர்சிப்பதும், அரசியல், இராஜதந்திர செயன்முறைகள் ஊடாக இதனை ஊக்குவிப்பதும் மேற்கொள்ளப்படுகின்றது. நவீன தொழிநுட்பத்தின் உச்ச பயனை அனுபவிக்கின்ற சமூகங்களில் இருந்து தொன்மை நாகரீகங்களின் தொடர்ச்சியாக இன்னும் வாழ்கின்ற சமூகங்கள் வரையில் ஜனநாயக ஆட்சி முறையின் ஊடாக ஏராளமான நன்மைகளை அனுபவிக்கக்கூடியதாக உள்ளது எனினும் அதில் உள்ள அடிப்படையான சில குறைபாடுகள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியவையாகவே உள்ளன. இந்த புகழ்மிக்க நிர்வாகமுறையின் கொண்டாடப்படுகின்ற மேற்பரப்பிற்கு கீழே பல்வேறு சிக்கல்களும், குழப்பங்களும் நிறைந்துள்ளமை மறைக்க முடியாததாகவே உள்ளது. இது தொடர்பில் கவனத்தில் கொண்டு ஜனநாயக முறை தொடர்பான விமர்சனங்கள் கிரேக்க காலத்து பிளேட்டோ, அரிஸ்டோட்டில் முதலான அரசியலாளர்களில் தொடங்கி சமகாலம் வரையிலும் பல்வேறு அறிஞர்கள் முன்வைத்துள்ளமையினை அவதானிக்க முடிகின்றது. உதாரணமான பின்வரும் சில கருத்துக்களை கூற முடியும்;

புகழ்பெற்ற அரசியல் நூலான *குடியரசு (Republic)* என்பதில் பிளேட்டோ ஜனநாயக ஆட்சி முறை தன்னுடைய தவிர்க்க முடியாத உள்ளார்ந்த பண்புகள் காரணமாக கொடுங்கோண்மை ஆட்சியாக மாற்றமடைகின்றது என்ற கருத்தினை முன்வைத்துள்ளார். இது மனிதர்களது இயற்கையான சுபாவம், அரசியல் அதிகாரத்தின் இயங்கு தன்மை என்பவற்றினை கருத்தில் கொண்ட வகையில் விருத்தி செய்யப்பட்ட கருத்தாக உள்ளது. ஜனநாயக முறையில் மனிதர்களது இயலுமை, குணாம்சங்கள், பெற்றிருக்கின்ற பயிற்சி என்பன

கருத்தில் கொள்ளப்படாமல் அனைத்து குடிமக்களும் சமமான அளவில் பங்குபற்றுவதற்கு வாய்ப்பு உள்ளது. இது வெளித்தோற்றத்தில் ஒரு சமநிலையினை காட்டினாலும் உள்ளார்ந்த வகையில் சமத்துவமின்மைக்கும், குழப்பங்களுக்கும் காரணமாக உள்ளது. ஏனெனில் இதில் ஆட்சி செய்வதில் திறன்மிக்க, தொலைநோக்கு சிந்தனையுள்ளவர்களைவிட தேர்தலில் வெற்றிபெறுவதற்குரிய இயலுமையினைக் கொண்டுள்ள, வெகுஜன பிரபல்யம் கொண்ட, வெகுஜனமக்களை கவர்கின்ற இயல்புடையவர்களே வெற்றிபெறுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன. தெரிவுசெய்யப்படுகின்ற பிரதிநிதிகள் ஒழுக்க பண்புடையவர்களாக, நேர்மையானவர்களாக இல்லாமல் பொதுப்புத்தியின் அடிப்படையில் செயற்படுபவர்களாக, தனிப்பட்ட ஆசைகளினால் ஆட்கொள்ளப்பட்டவர்களாக செயற்படுவதற்கு வாய்ப்பு உள்ளது. இவர்கள் அறிவுத்திறனாலோ அல்லது பொதுநன்மையினை கருத்தில் கொண்டோ செயற்படுவதற்கு வாய்ப்பு இல்லை. இவர்கள் தங்களது சொந்த நன்மைக்காக வெகுஜன மக்களை தவறான கருத்தபிப்பிராயங்களுக்குள் உள்வாங்கி செயற்படுத்துவதற்கும் வாய்ப்பு உள்ளது. அடிப்படை அறிவற்ற குடிமக்களும் ஆட்சியாளர்களை தெரிவு செய்வதற்கு வாய்ப்பு உள்ள இந்த ஆட்சி முறையில் கற்றறிந்த, நீண்டகால நன்மைகளை ஏற்படுத்தக்கூடிய திட்டங்களை நடைமுறைப்படுத்தக்கூடிய தலைவர்கள் தெரிவு செய்யப்படுவதனை விட மக்கள் கவர்ச்சிக்கு வாய்ப்புள்ளவர்களே தெரிவு செய்யப்படுவதற்கு வாய்ப்புக்கள் உள்ளன. இவ்வாறு மக்களின் அறியாமைத்தனத்தை தனிப்பட்ட ஆதாயங்களுக்காக பயன்படுத்திக்கொள்கின்ற கவர்ச்சியான தலைவர்களுக்கு ஜனநாயகம் அதிகாரம் அளிக்கின்றது. இது இறுதியில் குழப்பமான ஒரு ஆட்சி முறைக்கே வாய்ப்பினை ஏற்படுத்துகின்றது. பிளேட்டோவின் கருத்தில் ஜனநாயக ஆட்சி இத்தகைய பண்புகள் காரணமாக எதேச்சதிகார தன்மை கொண்டதாகவே மாறுகின்றது.

*அரசியல் (Politics)* எனும் நூலில் அரிஸ்டோட்டில் பல்வேறு ஆட்சி முறைகள் தொடர்பாக ஆராய்ந்து வெளிப்படுத்தியுள்ள நிலையில் ஜனநாயகத்தை பல்வேறு வகைகளில் குறைபாடுடையதாக முன்வைக்கின்றார். இந்த முறையில் அதிகாரம் பெரும்பான்மையானவர்களின் கைகளில் தங்கியிருக்கின்ற நிலையில் சிறுபான்மையினரின் நலன்கள் புறக்கணிப்புக்கு உள்ளாகின்ற வாய்ப்பு உள்ளது. இது சமூக முரண்பாடுகளுக்கும், பிரிவினைவாதத்திற்கும் வாய்ப்பினை வழங்குகின்றது. அத்துடன் உறுதியற்ற ஆட்சி, கும்பல் ஆட்சி என்பன

ஏற்படுவதற்கும் வாய்ப்பினை வழங்குகின்றது. மிகவும் உச்சமான நிலையில் சட்டவாட்சிமுறை கீழ்நிலைப்படுத்தப்படுவதற்கும் இங்கு வாய்ப்பு உள்ளது. ஏனெனில் பெரும்பான்மை மக்களது விருப்பார்வமே இறைமை கொண்டதாக மாறுகின்றபோது அது பெரும்பான்மையினரின் கொடுங்கோன்மைக்கு வாய்ப்பினை வழங்குகின்றது, இதன்போது ஆட்சியில் உள்ளவர்களும், அவர்களது ஆதரவினை பெற்றவர்களும் தங்களது நலன்களை பாதுகாத்துக்கொள்வதற்கு தேவையான விடயங்களை சட்டமுறைகளை மீறி செயற்படுவார்கள்.

அறிவொளிக்காலத்தில் மொன்டெஸ்கியு, ரூசோ முதலான சிந்தனையாளர்கள் ஜனநாயக ஆட்சி முறை தொடர்பில் கடுமையான விமர்சனங்களை முன்வைத்தள்ளனர். மொன்டெஸ்கியு தனது The Spirit of the Laws எனும் நூலில் ஜனநாயகத்தின் அடிப்படைப் பண்பு 'அரசியல் நல்லொழுக்கம்' (Political Virtue) என்பதாகும், ஆனால் உறுதியான பொது அரசியல் நல்லொழுக்கம் இல்லாத மனிதர்கள் இந்த முறையின் ஊடாக அரசியலுக்குள் உள்வாங்கப்படுகின்ற நிலையானது அவர்கள் தங்களது குறுகிய சுய-இலாபங்களை முன்நிலைப்படுத்தி செயற்படுவதற்கு காரணமாக அமைகின்றது. இது இறுதியில் பொதுமக்களுக்கு பயனற்ற ஒரு ஆட்சியாக மாறுவதற்கு காரணமாக அமைந்துவிடுகின்றது. 'பெரும்பான்மையின் அராஜகம்' (Tyranny of the Majority) நிலைபெறுவதற்கு இந்த ஆட்சிமுறை காரணமாக அமைகின்றது. ஏனெனில் அவர்களினால் தெரிவுசெய்யப்பட்ட ஆட்சியாளர்களது ஆதரவுடன் தாங்கள் விரும்பிய விடயங்களை செய்கின்ற இயலுமை கொண்டவர்களாக மக்கள் உள்ளனர், மற்ற வகையில் அவர்களது ஆசைகளை நிறைவேற்றும் அவசியம் ஆட்சியாளர்களுக்கு உள்ளது ஏனெனில் தாங்கள் ஆட்சியில் தொடர்வதற்கு அவர்களது ஆதரவே தேவையாக உள்ளது. இவ்வாறு அதிகார துஸ்பிரயோகங்களுக்கும், பொது சுதந்திரம் பாதிக்கப்படுவதற்குமுரிய வாய்ப்பு ஜனநாயக முறையில் உள்ளது. ரூசோ தன்னுடைய கருத்தில் பிரதிநிதித்துவ ஜனநாயக அரசியலானது பொதுமக்களது விருப்பினால் தெரிவுசெய்யப்பட்டவர்கள் பின்னர் தங்களது சுயவிருப்பு வெறுப்புக்களின் அடிப்படையில் செயற்படுவதற்கு ஆரம்பிக்கின்றபோது பொதுமக்கள் அரசியலில் இருந்து அந்நியமாவதற்கும், ஊழல் செயற்பாடுகள் மிகுவதற்கும் வாய்ப்பினை ஏற்படுத்துகின்றது. இதனால் குறைந்தளவான மக்கள் உள்ள சமூகங்களில் நேரடியான மக்கள் பங்கேற்ற அரசியல் முறையாக ஜனநாயக ஆட்சி இருப்பதே

அதன் உயர் நன்மைகளை பெற்றுக்கொள்ள வாய்ப்பினை தருகின்றது என்ற கருத்தினை முன்வைத்துள்ளார்.

இருபதாம் நூற்றாண்டில் ஜோசப் சாம்பீட்டர், மற்றும் றாபேட் டால் முதலான சிந்தனையாளர்களும் ஜனநாயகத்தை அதன் உள்ளார்ந்த அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு விமர்சித்துள்ளமையினை அவதானிக்க முடிகின்றது. சாம்பீட்டர் தன்னுடைய '*முதலாளித்துவம், சோசியலிசம், ஜனநாயகம்*' (*Capitalism, Socialism, and Democracy*) எனும் நூலில் ஜனநாயகம் என்பது சமூகத்தில் உயரடுக்கில் வசிக்கின்ற பிரபுத்துவ மக்கள் பிரிவுகளுக்கிடையில் அதிகாரத்திற்காக இடம்பெறுகின்ற போட்டி, இதில் அவர்களே மாறி மாறி வெற்றியையும் தோல்வியையும் பெறுகின்றனர். மக்கள் தொடர்ச்சியாக தோல்வியையே பெறுகின்றனர் என்று குறிப்பிடுகின்றார். 'மேலடுக்குப் போட்டி' என்ற எண்ணக்கருவை முன்வைக்கின்ற இவர் ஜனநாயகம் என்பது பகுத்தறிவான கலந்தாலோசனைகள் மற்றும் ஒருமித்த கருத்தை உருவாக்கி செயற்படுவதற்கான வாய்ப்பினை தருவதாக இல்லாமல் அதிகாரத்திற்கு போட்டியிடுகின்ற உயரடுக்கு மக்கள் தங்களது சிந்தனைக்கு ஏற்ப பொதுக்கருத்தை வலியுறுத்தி, மக்களை திசைதிருப்பி, அவர்களது உணர்ச்சிகளை கையாண்டு ஆதரவினை பெற்று வெற்றி பெறுகிற ஒரு போட்டியிடும் சந்தையாகவே அது செயற்படுகின்றது என்று கூறுகின்றார். இவரின்படி ஜனநாயகம் என்பது மக்களது நலன்களை பற்றியது அல்ல மாறாக உயர் அடுக்கில் செயற்படுகின்ற மனிதர்கள் தங்களது அதிகாரத்தையும், செல்வாக்கையும் பலப்படுத்துவதற்கு முயற்சிக்கின்ற ஒரு முறையாகவே உள்ளது. றாபேர்ட் டால் தன்னுடையு 'பல்வகைமை: பங்கேற்பு மற்றும் எதிர்ப்பு' *(Polyarchy: Participation and Opposition)* என்ற நூலில் அரசியல் பங்குபற்றுதலில் இருந்து மக்கள் விலகியிருக்கின்ற தன்மையினையும், அரசியல் பங்கேற்புகளில் உள்ள மாறுபட்ட தன்மைகளையும் கவனத்தில் கொண்டு அதற்கு ஜனநாயக ஆட்சியினால் மக்களுக்கு ஏற்பட்ட விரக்தி நிலையே காரணம் என்பதனை முன்வைக்கின்றார்.

மேற்குறித்த விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நோக்குகின்றபோது தீர்மானம் மேற்கொள்ளுதல், தனிநபர் சுதந்திரத்தை ஊக்குவித்தல், பங்குபற்றுவதற்கான வாய்ப்புக்களை வழங்குதல் என்ற விடயங்களில் ஜனநாயகம் நன்மையான விடயங்களை கொண்டிருந்தாலும் அது பல்வேறு

குழப்பங்களையும் இயல்பாகவே உள்ளடக்கியதாகவே உள்ளமையினையும் அறிந்துகொள்ள முடிகின்றது. தகுதியற்ற அல்லது சூழ்ச்சியான தலைவர்களது உருவாக்கம், பெரும்பான்மையான மக்களது கொடுங்கோண்மையான ஆட்சி, சிறுபான்மையினரின் நலன்கள் புறம்தள்ளப்படுதல், சமூக முரண்பாடுகள், பொதுமக்களை அரசியல் பங்கேற்பில் இருந்து அந்நியப்படுத்துதல், சுயமான தெரிவு என்ற பெயரில் உயரடுக்கு மக்களே மாறி மாறி ஆட்சியாளர்களாக செயற்படுதல் என பல்வேறாக அவை உள்ளன. எனவே தற்போது உள்ள ஆட்சிமுறைகளில் பெரும்பாலான நாடுகள் பின்பற்றுகின்ற ஒன்றாக ஜனநாயகம் உள்ள நிலையில் அதனை உயர்ந்தபட்ச நன்மையினை பெற்றுக்கொள்வதற்கு உகந்த வகையில் பயன்படுத்துவதற்கான நெறிமுறைகள் பின்பற்றப்படுவது அவசியமாக உள்ளது. இதற்காக கல்வி மற்றும் விழிப்புணர்வுச் செயற்பாடுகள், அரசியல் சீர்திருத்தல், பொதுமக்களது அரசியல் ஈடுபாட்டினை ஊக்குவித்தல், சிறுபான்மை உரிமைகளுடன் பெரும்பான்மை ஆட்சியை சமநிலைப்படுத்தல், தொடர்ச்சியான மதிப்பிடுகளையும் தேவையான மாற்றங்களையும் ஏற்றுக்கொள்ளுதல், நல்லொழுக்கப் பண்புகள் கொண்ட தலைவர்களை தெரிவுசெய்தல் என பல முறைகள் பின்பற்றப்பட முடியும். இவை சுயநலனுக்கு அப்பாற்பட்டு பொதுநல நோக்கில் சிந்திக்கும் இயல்புடையவர்களான நல்லொழுக்கப் பண்புள்ளவர்களாக பொதுமக்கள் வளர்த்தெடுக்கப்படுகின்ற போதே சாத்தியமாகின்றது. அதாவது ஜனநாயகம் என்பது நல்லொழுக்கப் பண்புகளுடைய மக்கள் வாழ்கின்ற ஒரு தேசத்திற்கு முழுமையாக நன்மையானதாக உள்ளது. ஆனால் சுயநல உந்தல்களினால் செயற்படுகின்ற மக்கள், தலைவர்கள் உள்ள நாடுகளில் அவர்களின் வீழ்ச்சிக்கே காரணமாக அமைகின்றது. இதற்குரிய அண்மைக்கால உதாரணங்களாக இலங்கையில் 2009ஆம் ஆண்டிற்கு பின்னர் நிலவுகின்ற அரசியல் ஸ்திரமற்ற தன்மை, தென் இந்தியாவில் குடும்ப அரசியலின் செல்வாக்கு, இந்தியாவில் கட்சிகள் உருவாக்கியிருக்கின்ற கொள்கை சார்ந்த செயற்பாடுகள், மற்றும் இரஸ்யா, இஸ்ரேல் முதலான நாடுகளின் ஆக்கிரமிப்புச் செயற்பாடுகள் என்பவற்றினைக் குறிப்பிட முடியும்.

> "Democracy is a government of the people, by the people, and for the people"
>
> **Abraham Lincoln**